செ.வெ.எண்: 374 நாள்:29.06.2021

**பூதலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நான்காம் நாள் மற்றும் நிறைவு நாள் ஜமாபந்தி நடைபெற்றது.**

தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (29.06.2021) நான்காம் நாள் மற்றும் நிறைவு நாள் ஜமாபந்தி நடைபெற்றது.

1430 ஆம் பசலி ஆண்டிற்கான ஜமாபந்தி நிகழ்ச்சி தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள ஒன்பது வட்டங்களிலும் (25.06.2021) அன்று தொடங்கியது. பூதலூர் வருடத்திற்கான ஜமாபந்தி நிகழ்ச்சி பூதலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. நான்காம் நாள் மற்றும் நிறைவு நாளை இன்று பூதலூர் வட்டத்திற்குட்பட்ட, சொரக்குடிப்பட்டி, வெண்டையம்பட்டி, இராயமுண்டான்பட்டி, புதுக்குடி வடபாதி, புதுக்குடி தென்பாதி, மனையேறிப்பட்டி, பாலையப்பட்டி வடக்கு, பாலையப்பட்டடி தெற்கு, சானுராப் பட்டி, புதுப்பட்டி, செங்கிப்பட்டி, அச்சாம்பட்டி மற்றும் கூடுதல் ஆகிய வருவாய் கிராமங்களை சேர்ந்த பொதுமக்கள் தங்களின் கோரிக்கையை ஆன்லைன் மூலம் பதிவேற்றம் செய்த மனு மற்றும் தபால் பெட்டியில் பெறப்பட்ட மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து கிராம நிர்வாக அலுவலர்கள் முலம் பராமரிக்கும் கிராம கணக்கு பதிவேடுகளில் ஆய்வு செய்தார். முன்னதாக நில அளவயிர் பயன்படுத்தும் அளவிடும் கருவி சரியாக உள்ளதா என நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பொதுமக்களிடம் இருந்து ஜமாபந்தியில் கடந்த நான்கு நாட்களில் மொத்தம் 287 மனுக்கள் பெறப்பட்டு இதில் சமூக பாதுகாப்பு திட்டத்தில் முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகைகள் மற்றும் பட்டா மாறுதல், விலையில்லா பட்டா மாறுதல் என 131 மனுக்கள் மீது தீர்வு காணப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கியும், 156 மனுக்கள் நிலுவையில் உள்ள இம்மனுக்கள் மீது உரிய விசாரணை செய்து உடனடி தீர்வு எடுக்கும்படி தொடர்புடைய அனைத்து அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் உத்தரவிட்டனர்.

நிகழ்வின்போது மாவட்ட ஆட்சியரின் நேர்முக மேலாளர் (பொது) திரு. ரத்தினவேல், பூதலூர் வட்டாட்சியர் திரு. இராமச்சந்திரன், வட்டாட்சியர்கள் திரு.புண்ணியமுர்த்தி, திருமதி. ராதிகா உட்பட பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.**

.